DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.**

**STC.No.113/2023**

**2025-ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 09- ம் நாள் வியாழக்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா. 02-வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.லட்சுமி இளநிலை உதவியாளர் நிறைவேற்றுபவர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 2 | தொழில் | - | ஓட்டுனர் |
| பெயர் | - | பொன்னர் | வட்டம் | - | வால்பாறை |
| த/பெ | - | சுப்பிரமணி | சமயம் | - | |
| கிராமம் | - | பாரதிதாசன் நகர் குரங்குமுடி | வயது | - | 33/2025 |
| சாதி | - | | | | |

**<u>09-10-2025</u>**

**( எதிரி ஆஜரில்லை)**

(எதிரி தரப்பில் 355 BNSS-ன் கீழான மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது)

**<u>முதல் விசாரணை:</u>**

1. நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து லோடு வண்டி ஓட்டுநராக வேலை செய்து வருகிறேன். அ.சா.1 மதனகோபால் என்பவரை தெரியும். வழக்கின் எதிரியை தெரியும். அ.சா.1-க்கும், எதிரிக்கும் இடையே என்ன பிரச்சனை என்று தெரியாது. நான் எந்த சண்டையையும் பார்க்கவில்லை. எந்த சண்டையையும் கேள்விப்படவும் இல்லை. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருத அனுமதி கோரியதில் அனுமதி வழங்கப்பட்டு சாட்சி அரசு தரப்பால் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.)**

**<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

1. கடந்த 13.10.2024-ம் தேதி காலை சுமார் 10.30 மணியளவில் நான் KGR எஸ்டேட்டிற்கு வேலை சென்ற போது, அ.சா.1 என்னையும், அவரது கார் ஓட்டுநர் கருப்பசாமி என்பவரையும் அழைத்து அ.சா.1-ன் மனைவி மற்றும் மகன் தங்கியிருக்கும் காட்டேஜில் உள்ள அவரது ரூமில் உள்ள பொருட்களை எடுக்க அழைத்ததால் நாங்கள் அ.சா.1 உடன் சென்றோம் என்று சொன்னால் சரியல்ல. காலை 10.30 மணிக்கு சென்ற போது, எதிரி வழியில் நின்று கொண்டிருந்ததால் எங்களை கண்டதும் வீட்டின் கேட் முன்பாக சென்று அ.சா.1 அவரது ரூமுக்கு செல்ல விடாமல் கேட்டை சாத்தினார் என்று சொன்னால் சரியல்ல. அ.சா.1 எதிரியிடம் ஏன் கேட்டை சாத்துகிறாய் என்று கேட்ட போது, நீ எல்லாம் நாங்கள் இருக்கிற இடத்துக்கு வரக்கூடாது என்று சொல்லி கேட் அருகே நின்று கொண்டிருந்தார் என்று சொன்னால் சரியல்ல. அ.சா.1-ம் கேட்டை திறக்க சொல்லி பொருட்களை எடுக்க வேண்டும் என்று எதிரியிடம் கேட்ட போது, எதிரி கேட்டை திறக்காகததால் அ.சா.1 அவர் தங்கியிருக்கும் காட்டேஜிற்கு வந்துவிட்டார் என்று சொன்னால்

சரியல்ல. மேற்படி எதிரி அ.சா.1-றை கெட்ட வார்த்தையால் பேசவும் இல்லை, சட்டையை பிடித்து இழுத்து அடிக்கவும் இல்லை, கத்தியால் குத்தி மிரட்டவும் இல்லை. அ.சா.1-ஐ எதிரி அவர் இருக்கும் வீட்டிற்குள் வரக்கூடாது என்று தடுக்க மட்டும் செய்தார் என்று சொன்னால் சரியல்ல. சம்பவம் குறித்து போலீசார் என்னை விசாரித்தார்கள் என்று போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரிக்கு பயந்து எதிரிக்கு ஆதரவாகவும், அரசு தரப்பிற்கு எதிராகவும் பிறழ்சாட்சியாக மாறி சாட்சியமளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>** இல்லை

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(ஒப்பம்) திருமதி. N.மீனாட்சி,
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை.

DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.**

**STC.No.113/2023**

**2025-ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 09- ம் நாள் வியாழக்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா.03 -வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.லட்சுமி இளநிலை உதவியாளர் நிறைவேற்றுபவர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 03 | தொழில் | - | கூலி வேலை |
| பெயர் | - | ராஜம்மாள் | வட்டம் | - | வால்பாறை |
| க/பெ | - | சுப்ரமணி | சமயம் | - | |
| கிராமம் | - | குரங்குமுடி எஸ்டேட் | வயது | - | 69/2025 |
| சாதி | - | | | | |

**<u>09-10-2025</u>**

**( எதிரி ஆஜரில்லை)**

(எதிரி தரப்பில் 355 BNSS-ன் கீழான மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது)

**<u>முதல் விசாரணை:</u>**

1. நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா.1 மதனகோபால் என்பவரை தெரியும். அவருடைய எஸ்டேட்டில் நான் வேலை செய்து வந்தேன். எதிரி தனுஷ்கிஷன் என்பவரை தெரியும். சுமார் 2,3 வருடங்களுக்கு முன்பாக தேதி, மாதம் நினைவில்லை. ஒரு நாள் மதியம் 03.30 மணியளவில் அ.சா.1-ன் வீட்டில் வேலை செய்து கொண்டிருந்த போது, அ.சா.1 வீட்டின் வெளியே கதவு அருகே நின்று கொண்டிருந்தார். எதிரி அவரை உள்ளே வரவிடாமல் கதவை அடைத்துக்கொண்டு தடுத்துக்கொண்டிருந்தார். சம்பவம் குறித்து போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

1. அ.சா.1 மதனகோபால் அன்றைய தினம் கையில் சுத்தியல் வைத்திருந்தாரா என்றால் ஆமாம். சுத்தியலை வைத்து தான் எதிரியை கதவை திறக்க சென்னாரா என்றால் ஆமாம். அதனால் தான் எதிரி கதவை திறக்க மறுத்தார்.

**<u>மறு விசாரணை</u>** :இல்லை

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(ஒப்பம்) திருமதி. N.மீனாட்சி,
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை.

DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.**

**STC.No.113/2023**

**2025-ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 09- ம் நாள் வியாழக்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா.04 -வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.லட்சுமி இளநிலை உதவியாளர் நிறைவேற்றுபவர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 04 | தொழில் | - | கூலி வேலை |
| பெயர் | - | காமராஜ் | வட்டம் | - | வால்பாறை |
| த/பெ | - | மஞ்சப்பன் | சமயம் | - | |
| கிராமம் | - | குரங்குமுடி எஸ்டேட் | வயது | - | 57/2025 |
| சாதி | - | | | | |

**<u>09-10-2025</u>**

**( எதிரி ஆஜரில்லை)**

(எதிரி தரப்பில் 355 BNSS-ன் கீழான மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது)

**<u>முதல் விசாரணை:</u>**

1. நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா.1 மதனகோபால் என்பவரை தெரியும். அவருடைய எஸ்டேட்டில் நான் வேலை செய்து வந்தேன். எதிரி தனுஷ்கிஷன் என்பவரை தெரியும். அ.சா.1-க்கும் எதிரிக்கும் இடையே என்ன சம்பவம் நடைபெற்றது என்று எனக்கு தெரியாது. நான் காட்டில் வேலை செய்து வருகிறேன். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருத அனுமதி கோரியதில் அனுமதி வழங்கப்பட்டு சாட்சி அரசு தரப்பால் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.)**

**<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

1. கடந்த 13.10.2024-ம் தேதி காலை சுமார் 10.30 மணியளவில் நான் KGR எஸ்டேட்டிற்கு வேலை சென்ற போது, அ.சா.1, அ.சா.2-யையும், அவரது கார் ஓட்டுநர் கருப்பசாமி என்பவரையும் அழைத்து அ.சா.1-ன் மனைவி மற்றும் மகன் தங்கியிருக்கும் காட்டேஜில் உள்ள அவரது ரூமில் உள்ள பொருட்களை எடுக்க அழைத்ததால் அ.சா.2 மற்றும் கருப்பசாமி அ.சா.1 உடன் சென்றார்கள் என்று சொன்னால் சரியல்ல. காலை 10.30 மணிக்கு எதிரி வழியில் நின்று கொண்டிருந்ததால் எங்களை கண்டதும் வீட்டின் கேட் முன்பாக சென்று அ.சா.1 அவரது ரூமுக்கு செல்ல விடாமல் கேட்டை சாத்தினார் என்று சொன்னால் சரியல்ல. அ.சா.1 எதிரியிடம் ஏன் கேட்டை சாத்துகிறாய் என்று கேட்ட போது, நீ எல்லாம் நாங்கள் இருக்கிற இடத்துக்கு வரக்கூடாது என்று சொல்லி கேட் அருகே நின்று கொண்டிருந்தார் என்று சொன்னால் சரியல்ல. அ.சா.1-ம் கேட்டை திறக்க சொல்லி பொருட்களை எடுக்க வேண்டும் என்று எதிரியிடம் கேட்ட போது, எதிரி கேட்டை

திறக்காகததால் அ.சா.1 அவர் தங்கியிருக்கும் காட்டேஜிற்கு வந்துவிட்டார் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி எதிரி அ.சா.1-ஐ கெட்ட வார்த்தையால் பேசவும் இல்லை, சட்டையை பிடித்து இழுத்து அடிக்கவும் இல்லை, கத்தியால் குத்தி மிரட்டவும் இல்லை. அ.சா.1-ஐ எதிரி அவர் இருக்கும் வீட்டிற்குள் வரக்கூடாது என்று தடுக்க மட்டும் செய்தார் என்று சொன்னால் சரியல்ல. சம்பவம் குறித்து போலீசார் என்னை விசாரித்தார்கள் என்று போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரிக்கு பயந்து எதிரிக்கு ஆதரவாகவும், அரசு தரப்பிற்கு எதிராகவும் பிறழ்சாட்சியாக மாறி சாட்சியமளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>** இல்லை

**<u>மறு விசாரணை</u>** :இல்லை

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(ஒப்பம்) திருமதி. N.மீனாட்சி,
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை.

DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.**
**STC.No.113/2023**
**2025-ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 09- ம் நாள் வியாழக்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா. 05-வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.லட்சுமி இளநிலை உதவியாளர் நிறைவேற்றுபவர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 05 | தொழில் | - | மேற்பார்வையாளர் |
| பெயர் | - | சாமிக்கண்ணு | வட்டம் | - | வால்பாறை |
| த/பெ | - | ராஜு | சமயம் | - | |
| கிராமம் | - | குரங்குமுடி எஸ்டேட் | வயது | - | 50/2025 |
| சாதி | - | | | | |

**<u>09-10-2025</u>**

**( எதிரி ஆஜரில்லை)**

(எதிரி தரப்பில் 355 BNSS-ன் கீழான மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது)

<u>முதல் விசாரணை:</u>

1. நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து மேற்பார்வையாளராக பணிபுரிந்து வருகிறேன். அ.சா.1 மதனகோபால் என்பவரை தெரியும். அவருடைய எஸ்டேட்டில் நான் வேலை செய்து வந்தேன். எதிரி தனுஷ்கிஷன் என்பவரை தெரியும். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரிலுள் 1-வது சாட்சி கையொப்பம் என்னுடையது. **பார்வை மகஜரிலுள்ள 1-வது சாட்சி கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.2-ஆக குறியீடு செய்யப்படுகிறது.** சுமார் 6, 7 வருடங்களுக்கு முன்பாக தேதி, மாதம் தெரியாது. வால்பாறை காவல் நிலைய போலீசார் நான் வேலை செய்யும் எஸ்டேட்டிற்கு வந்து எனது ஓனர் மற்றும் அவரது மனைவிக்கு இடையே உள்ள பிரச்சனை சம்பந்தமாக என்னிடம் கையொப்பம் கேட்டார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருத அனுமதி கோரியதில் அனுமதி வழங்கப்பட்டு சாட்சி அரசு தரப்பால் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.)**

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை:</u>

1. கடந்த 10.10.2023-ம் தேதி காலை 11.00 மணிக்கு வால்பாறை காவல் நிலைய போலீசார் குற்ற எண் 177/2022 வழக்கு தொடர்பாக கேஜிஆர் எஸ்டேட்டிற்கு வந்தார்கள் என்று சொன்னால் சரியல்ல. அப்போது போலீசார் என் முன்பாகவும், ராஜேந்திரன் என்பவர் முன்பாகவும், சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள் என்று சொன்னால் சரியல்ல. பின்னர் நானும், ராஜேந்திரன் என்பவரும் பார்வை மகஜரில் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம் என்று போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரிக்கு பயந்து

எதிரிக்கு ஆதரவாகவும், அரசு தரப்பிற்கு எதிராகவும் பிறழ் சாட்சியாக மாறி சாட்சியமளிக்கின்றேன் என்று சொன்னால் சரியல்ல.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>** இல்லை

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(ஒப்பம்) திருமதி. N.மீனாட்சி,
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை.